1981 ஏப்ரல் 20]

செக்ஷனில் Workman means "any person including an apprentice employed in any industry to do any skilled or unskilled manual supervisory, technical"

என்பதுதன் மேற்கு வங்க அரசு எடுத்த முயற்சியைத் தமிழக அரசும் எடுக்க வேண்டுமென்பதற்காக இந்தப் பில்லை வரவழைத்திருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வருவதில் தாமதம் இருந்தால் மாநில அரசு விரைவாகவே செயல்படும்.

திரு க. ப. ரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து விற்பனை போன்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைக் காரணம் ஏதுமின்றி நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு விடுவித்து விடுவதால் அவர்கள் அரசுத் துறையிலே வேலை வாய்ப்பைப் பெற முடியாத அளவிற்கு அதற்கான வயதைத் தாண்டிவிடுகிறார்கள். ஆகவே, இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் இருந்தால் அவர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அமைச்சரவர்கள் கொண்டு வர உத்தேசித்திருக்கின்ற சட்டத் திருத்தத்தை (retrospective effect) கொடுத்து கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறையுடன் ஆலோசித்து ஆவன செய்யப்படும்.

ஊத்துக்குளி ஒன்றியப் பகுதியில் பழுதடைந்துள்ள மின் இறைப்பான்கள்.

*வினா எண் 805.—திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்தில் பழுதடைந்து குடிநீர் வாரியத்திற்குக் கொண்டு வந்த மின் இணைப்பு மேட்டார்கள் எத்தனை?

(ஆ) அவை எத்தனை மாதங்களாக, நாட்களாக பழுது பாக்கப்படாமல் இருக்கின்றன, ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) 33 மின் இறைப்பான்கள். அவற்றில் 24 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டன. மீதமுள்ள 9 இறைப்பான்களில் பழுதுகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இவை விரைவில் முடியும்.

திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மின் இறைப்பான்கள் செப்பனிடப்பட்டு 9 மின் இறைப்பான்கள் இன்னும் செப்பனிடப்படாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1 வருடம், 2 வருடம் என்று இப்படி வருடக்கணக்கில் இருக்கிற காரணத்தால், குடிதண்ணீருக்காக மக்கள் மிகவும் அவதிப்படுகிற நிலையிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவற்றைப் பழுதுபார்த்து மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே, விரைவிலே, அவைகளை ரிப்பேர் செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஐயாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 806—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் பாதர்பேட்டை அருகே ஐயாற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஆய்வு செய்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) சுமார் 5,100 ஏக்கர் நிலங்களுக்கு புஞ்சைப் பாசன வசதி அளிக்கும்படியான இத்திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5,100 ஏக்கர் புஞ்சை நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ், அணைக்கட்ட பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது? பரிசீலனை முடிந்து இந்த ஆண்டே மேற்படி அணையைக் கட்டும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?